**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 11.06.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 1

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 11ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. செந்தில்குமார் என்ற சதீஸ்குமார் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( ஏ 2– ஞானசேகரன், ஏ 4 – கோதண்டராமன் ஆஜர்)

(ஏ 3 – கிருஷ்ணவேலு ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

(ஏ 1 –முனியசாமி இறப்பு)

<u>முதல் விசாரணை:</u>

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் நயினார்கோவில் அருகே உள்ள வல்லம் கிராமம் ஆகும். நான் தற்சமயம் மதுரை முனிச்சாலையில் குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். ஏற்கனவே நான் பரமக்குடி பாண்டின் தெருவில் 4 வருடங்கள் குடியிருந்தேன். சாட்சி பாஸ்கரன் எனது

உடன்பிறந்த சகோதரர். சாட்சி இராமானுஜம் எனது தகப்பனார், சாட்சி இந்திரா எனது அம்மா, எனது உடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 3 பேர். இந்த வழக்கில் இறந்துபோன வெங்கடேசன் எனது உடன்பிறந்த தம்பி. நான் மதுரை தெற்கு ஆவணிமூலவீதியில் உள்ள KRS சில்வர்ஸ் என்ற கடையில் வேலை செய்து வருகிறேன்.

நாங்கள் ஏற்கனவே பரமக்குடியில் குடியிருந்த பொழுது எங்கள் வீட்டின் அருகே ஐயப்பன் என்பவர் குடியிருந்து வந்தார். அவரும் இறந்துபோன எனது தம்பி வெங்கடேசனும் நண்பர்கள் ஆவார்கள். கடந்த 2010 ம் வருடம் பரமக்குடி போலீசார் எனது தம்பி வெங்கடேசன் மற்றும் அவரது நண்பர் ஐயப்பன் மீது திருட்டு வழக்கு பதிவு செய்து அதில் மதுரை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அதன்பிறகு வக்கீல் பிடித்து 20 நாட்களுக்கு பிறகு எனது தம்பியை ஜாமினில் எடுத்தோம். எனது தம்பி பிணையில் வந்த பிறகு எனது சொந்தபந்தங்கள் எனது தம்பி ஊரில் இருந்தால் பிரச்சனை ஏற்படும் எனச்சொன்னதால் எனது தம்பியை சென்னைக்கு அனுப்பினோம். அங்கு சிறிது நாட்கள் வேலை செய்துவிட்டு வேலை பிடிக்கவில்லை என கூறி திரும்ப மதுரைக்கு வந்துவிட்டார்.

அங்கு எனது தம்பி மதுரை அண்ணாநகரில் ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார். சாப்பாட்டிற்கு மட்டும் எங்கள் வீட்டிற்கு வருவார். மற்ற நேரத்தில் ஒரு சிறிய வீடு எடுத்து தங்கியிருந்தார்.

கடந்த 01.10.2012 ம் தேதியன்று எனது சகோதரர் வெங்கடேசன் பரமக்குடி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் ஆஜராக சென்றார். நீதிமன்ற வாய்தாவிற்கு சென்றவர் திரும்ப எங்கள் வீட்டிற்கு வரவில்லை. பின்பு 03.10.2012 ம் தேதியன்று நானும் மற்ற மூவரும் தொழில் சம்மந்தமாக மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தோம். செல்லும் வழியில் பரமக்குடியில் காந்திசிலை அருகே கூட்டமாக இருந்தது. நாங்கள் தொழில் சம்மந்தமாக இருவரை பரமக்குடியில் இறக்கிவிட்டோம்.

கூட்டமாக இருந்ததால் என்ன என்று விசாரித்தோம்.

அப்போது போலீசார் தாக்கியதால் ஒருவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இறந்தவர் யார் என்று எனக்கு சரியாக தெரியாததால் நான் அதே காரில் இராமேஸ்வரம் சென்றுவிட்டேன். சிறிது நேரம் கழித்து எனது முதலாளியும், மற்றொரு போலீசும் எனக்கு போன் செய்து எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் உடனே அங்கிருந்த எனது சித்தி மற்றும் உறவினர் மற்றும் எனது குடும்பத்தாருக்கும் தகவல் சொன்னேன். நான் இராமேஸ்வரத்திலிருந்து உடனே கிளம்பி பரமக்குடி வந்துவிட்டேன். எனது உறவினர்களும் குடும்பத்தார்களும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். நானும் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். அங்கு சென்று பார்த்த பொழுது எனது தம்பி இறந்தநிலையில் இருந்தார்.

எனது தம்பி எவ்வாறு இறந்தார் என்று விசாரித்த பொழுது, 03.10.2012 ம் தேதி அதிகாலை பரமக்குடி காந்தி சிலை அருகில் பைக்கில் எனது தம்பி வந்ததாகவும், அப்போது கிரைம் போலீசார் முனியசாமி மற்றும் ஞானசேகரன் ஆகியோர் வந்ததாகவும், அவர்களை பார்த்தவுடன் எனது தம்பி தப்பித்து ஓடியதாகவும், இதனை பார்த்த மேற்படி இரு போலீசாரும் எனது தம்பியை அடித்து பரமக்குடி நகர் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றதாகவும், அங்கு ஒரு வழக்கு பதிவு செய்ததகாவும், அது சம்மந்தமாக மேற்படி போலீசார் தாக்கியதில் எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டதில் போலீசார் பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கே இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

எனது தம்பி ஏற்கனவே சென்னையில் வேலை செய்த சமயத்தில் அங்கு ஒரு முஸ்லீம் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும், அவர்களுக்கு 9 மாதத்தில் ஒரு குழந்தை இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன். எனது தம்பி இறந்தது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் தாக்கியதால்தான் எனது தம்பி இறந்ததாக நாங்கள் எனது தம்பியின்

பிரேதத்தை வாங்காமல் அரசு மருத்துவமனைக்குள் உள்ளிருப்பு போராட்டம் மற்றும் பஸ் மறியல் செய்தோம். காவல்துறை தாக்கியதால்தான் எனது தம்பி இறந்தார் என்பதால் காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குடும்பத்திற்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், வழக்கினை CBCID க்கு மாற்ற வேண்டும் என்றும், தம்பி மனைவிக்கு அரசு வேலை வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தோம்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் RDO ஆகியோர்கள் வந்து எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். சம்மந்தப்பட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உங்களது கோரிக்கையின்மீது சட்டப்படி முடிவு செய்யப்படும் என்று கூறியதால் போராட்டத்தை கைவிட்டோம். பின்பு 04.10.2012 ம் தேதி எனது தம்பியின் உடலை பெற்று, எங்கள் குல வழக்கப்படி பரமக்குடியில் அடக்கம் செய்தோம். எனது தம்பி இறப்பில் சந்தேகம் இருப்பதால் இந்த வழக்கினை CBCID க்கு மாற்றச்சொன்னோம். தற்பொழுது இந்த வழக்கை CBCID விசாரித்து வருகிறார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை CBCID போலீசார் தவிர நீதித்துறை நடுவர் அவர்களும் விசாரித்தார்கள். நீதித்துறை நடுவர் 03.10.2012 ம் தேதியன்று என்னை விசாரித்தார். CBCID போலீசார் என்னை கடந்த ஜனவரி 2018 ம் வருடம் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன வெங்கடேசன் இறப்பதற்கு முன்பாக முகமது நாஸ் என்ற திவ்யா என்ற பெண்ணை அவர் திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். வழக்கு காலக்கட்டத்தில் எனது தம்பி வெங்கடேசன் மதுரை அண்ணாநகரில் இருந்தார். இந்த வழக்கு காலக்கட்டத்தில் நான் மதுரை முனிச்சாலையில் வசித்து வந்தேன். நான் இருக்கும் முனிச்சாலைக்கும், அண்ணாநகருக்கும் இடையே சுமார் 3–4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

எனது தம்பி வெங்கடேசன் சொந்தமாக இருசக்கர வாகனம்

வைத்திருந்தார். அவர் வைத்திருந்த அந்த வாகனத்தின் பதிவு எண். TN 59 AH 3116 ஆகும். அந்த வாகனத்தின் RC Book ஆனது எனது தம்பி பெயரில்தான் உள்ளது. பரமக்குடி நீதிமன்றத்திற்கு வழக்கிற்காக அவர் தனது இருசக்கர வாகன்ததில்தான் மதுரையிலிருந்து பரமக்குடி வந்தார். அந்த காலகட்டத்தில் எனது தம்பி வெங்கடேசன் சங்கு வியாபாரம் மற்றும் நகை வியாபாரம் செய்து வந்தார் என்றால் நகை வியாபாரம் மட்டும்தான் செய்து வந்தார். சங்கு வியாபாரம் செய்யவில்லை.

எனது தம்பி மீது பரமக்குடி நகர் காவல்நிலையத்தில் குற்ற எண். 93/2010 மற்றும் CC No.116/2010 என்ற வழக்கானது பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வந்தது. எனது தம்பி பெட்டிக்கடையை மதுரை அண்ணா நகரில் உள்ள சுகுனா ஸ்டோர் கடைக்கு எதிர்புறத்தில் உள்ள சந்தில் வைத்திருந்தார். அந்த கடைக்கு TIN Number இல்லை. அந்த அண்ணாநகரில்தான் எனது தம்பி அவரது மனைவியுடன் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

அந்த காலக்கட்டத்தில் எனது தம்பி செல்போன் வைத்திருந்தார். அந்த செல்போனை சோதனை செய்தால் அன்றைய தினம் எனது தம்பி வெங்கடேசன் யார்யாரிடம் பேசினார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தம்பிக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும், இந்த எதிரிகளுக்கும் முன்பகை எதுவும் கிடையாது என்றால் சரிதான், ஆனால் எனது தம்பி நீதிமன்றத்தில் ஆஜராகும் போது இறந்துபோன 1 வது எதிரி ஏனாதி முனியாசாமி எனது தம்பியிடம் ரூ.5000 கொடு ரூ.10000/- கொடு இல்லையென்றால் வழக்கு போட்டுவிடுவேன் என்று மிரட்டி வந்துள்ளார். இந்த விவரத்தை என்னை CBCID போலீசார் விசாரித்த பொழுதும், நீதித்துறை நடுவர் விசாரித்த பொழுது சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

நான் இந்த வழக்கை பரமக்குடி நகர் காவல்நிலைய் போலீசார் விசாரிக்கக்கூடாது என்றும், CBCID போலீசாருக்கு வழக்கை மாற்றி வழக்கு

விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு மதுரைக்கிளை சென்னை உயர் நீதிமன்றத்தில் Writ petition No.11610/2013 என்ற எண்ணில் நீதிப்பேராணை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் ஆய்வாளர் சுபாஷ், சார்பு ஆய்வாளர் ஏனாதி முனியசாமி, சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார், காவலர் வேலு,, காவலர் கோதண்டராமன், காவலர் ஞானசேகரன், காவலர் தெய்வேந்திரன், காவலர் நீதி ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து மனு தாக்கல் அந்த மனுவினை தாக்கல் செய்திருந்தேன்.

03.10.2012 ம் தேதி நான் நீதித்துறை நடுவர் முன் ஆஜராகி நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். நான் நீதித்துறை நடுவர் விசாரித்த பொழுது என்னுடைய விசாரணையில் அன்றைய தினம் நான் காரில் மதுரையிலிருந்து இராமேஸ்வரத்தில் காரில் 4 நபர்களுடன் வந்து கொண்டிருந்தேன் என்றும், பரமக்குடியில் காந்திசிலை அருகில் கூட்டமாக இருந்தது என்றும், யாரோ ஒரு நபர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், பின்னர் என்னுடன் வந்த இரு நபர்களை இறக்கிவிட்டு இராமேஸ்வரம் சென்றதாகவும், எனக்கு எனது முதலாளி போன் செய்து எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்ன விவரத்தை நீதித்துறை நடுவர் விசாரித்த பொழுது சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

சம்பவ காலக்கட்டத்தில் எனது தம்பி வீட்டிற்கும், தம்பி மனைவி குடும்பத்தாருக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. நான் தாக்கல் செய்த நீதிப்பேராணையில் எதிர்மனுதாரர்களாக ஆய்வாளர் சுபாஷ், சார்பு ஆய்வாளர், ஆறுமுக நைனார், காவலர் நீதி ஆகியவர்களை எதற்கான சேர்த்துள்ளேன் என்றால் அந்த காலக்கட்டத்தில் அவர்கள் அந்த காவல் நிலையத்தில் பணியில் இருந்தார்கள். இந்த சம்பவத்தின் காரணமாக அந்த காவல்நிலையத்தில் பணிபுரிந்த 8 காவலர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான்.

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் எனது தம்பியை

பார்த்த பொழுது எனது தம்பி என்ன உடை அணிந்திருந்தார் என்றால் அப்போது உடலில் எந்த ஆடையும் இல்லை. பின்னிட்டு நான் அதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரேதம் கிடந்த இடத்தில் நான் எனது தம்பி பிரேதத்தை பார்த்த பொழுது தம்பி தலையில் காயம் இருந்ததா என்றால் அவர் உடல் முழுக்க காயம் இருந்தது. தலையில் காயம் இருந்ததா என்று குறிப்பிட்டு பார்க்கவில்லை. எனது தம்பிக்கு விதைப்பையில் காயம் இருந்தது. விதைப்பகுதி தெறித்திருந்தது. எனது தம்பி மதுரையிலிருந்து பரமக்குடி நீதிமன்றத்திற்கு வேறொரு நபருடைய வாகனத்தில் வந்தார்.

எனது தம்பி சென்னையில் எந்த கடையில் என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. எனது தம்பி காணாமல் போன பின்னிட்டு எத்தனை மணிக்கு எந்த தேதியில் எனது தம்பிக்கு நான் போன் செய்தேன் என்றால் நான் போன் செய்யவில்லை. எனது தம்பி வேறொரு மதத்தில் திருமணம் செய்து கொண்டதால் எங்கள் குடும்பத்துடன் பேச்சுவார்த்தையின்றி தனியாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. என்னை பரமக்குடி துணைக்காவல் கண்காணிப்பாளர் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. CBCID போலீசாரை தவிர வேறு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. CBCID போலீசார் 2018 க்கு முன்பு என்னை விசாரிக்கவில்லை.

நான் மாலை 07.00 மணியளவில் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதற்கு முன்பாக மாலை 05.30 மணிக்கு பரமக்குடி நீதிமன்றத்திற்கு சென்றேன். அங்கு சென்று நீதிபதியிடம் விவரம் சொன்னேன். அவரும் மருத்துவமனைக்கு உடன் வந்தார். இந்த விசயத்தை நான் என்னுடைய நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரித்த பொழுதும், CBCID போலீசார் விசாரித்த பொழுதும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

போலீசாரிடம் இருந்து எனது தம்பி இருசக்கர வாகனத்தில் தப்பித்து செல்லும் பொழுது அவர் காந்திசிலை அருகில் கீழே விழுந்தார் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த காந்திசிலை அருகிலேயே கீழ விழுந்த

எனது தம்பியை சார்பு ஆய்வாளர் முனியசாமி கம்பால் அடித்து கைது செய்தார் என்ற விவரத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். எனது தம்பி கையில் கத்தி வைத்திருந்தார் என்றும், சார்பு ஆய்வாளர் முனியசாமி எனது தம்பியை பிடிக்க வரும்பொழுது அவர் கத்தியை வைத்து மிரட்டினார் என்றும், அதனால் முனியசாமி கம்பால் எனது தம்பியை தாக்கி கைது செய்தார்என்றால் அவ்வாறுதான் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் எனது தம்பி இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து கீழே விழுந்ததால் அவருக்கு தலைக்காயமும், உடலில் காயமும் ஏற்பட்டது என்றும், மேலும் சார்பு ஆய்வாளர் முனியசாமி கம்பால் தாக்கியதால் எனது தம்பிக்கு உடலில் காயம் ஏற்பட்டது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. எனது தம்பி மதுரையிலிருந்து பரமக்குடி நீதிமன்றத்தில் 01.10.2012 ம் தேதி ஆஜராக வந்த பொழுது அன்று மாலை பரமக்குடியில் உள்ள காக்காதோப்பு அருகே எனது தம்பிக்கும் இருநபர்களுடன் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சொன்னபடி எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் மற்றும் ஆஜர் இல்லாத மற்றொரு எதிரிக்கும் எனது தம்பி மரணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. CBCID போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும், இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்துடனும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 11.06.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 2

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 11ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. பாஸ்கரன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாஸ்கரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( ஏ 2– ஞானசேகரன், ஏ 4 – கோதண்டராமன் ஆஜர்)

(ஏ 3 – கிருஷ்ணவேலு ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

(ஏ 1 –முனியசாமி இறப்பு)

<u>முதல் விசாரணை:</u>

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் அருகே உள்ள வல்லம் ஆகும். நான் தற்பொழுது மதுரையில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். இதற்கு முன்னர் பரமக்குடியில் குடியிருந்து வந்தோம். நான் மதுரையில் உள்ள KRS சில்வர்ஸ் என்ற கடையில் வேலை

செய்து வருகின்றேன். அ.சா.1 எனது தம்பி. சாட்சி இராமானுஜம் எனது தந்தை, சாட்சி இந்திரா எனது தாயார். என் உடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 3 பேர். இவ்வழக்கில் இறந்துபோன வெங்கடேசன் எனது உடன்பிறந்த தம்பி.

நாங்கள் பரமக்குடியில் குடியிருந்த பொழுது எனது தம்பி வெங்கடேசனுக்கு ஐயப்பன் என்பவர் நெருங்கிய நண்பர் ஆவார். எனது தம்பி மீதும், ஐயப்பன் மீதும் பரமக்குடி காவல் நிலையத்தில் 2010ம் வருடம் திருட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டது. பின்னர் 20 நாட்கள் கழித்து எனது தம்பி ஜாமினில் வெளியே வந்தார். பரமக்குடியில் இருந்தால் வழக்கு விசயமாக அடிக்கடி அழைய வேண்டும் என்பதால் நாங்கள் எனது தம்பியை சென்னைக்கு அனுப்பிவிட்டோம். சிறிது நாட்களில் எனது சகோதரர் சென்னையிலிருந்து திரும்ப மதுரைக்கு வந்துவிட்டார். மதுரையில் எனது சகோதரர் சிறிய அளவில் பெட்டிக்கடை வைத்து அதில் பால் வியாபாரம் செய்து வந்தார்.

வருடம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை, எனது உடன்பிறந்த சகோதரர் பரமக்குடி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கிற்கு வாய்தாவிற்காக சென்றவர் வீட்டிற்கு திரும்ப வரவில்லை. இரு நாட்களுக்கு பின்பு எனது சகோதரரான அ.சா.1 செந்தில்குமார் போன் செய்து எனது தம்பியை போலீசார் அடித்துக்கொன்றுவிட்டதாகவும், பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு வரசொன்னதாகவும் சொன்னார். உடனே நான், எனது தாய், தந்தையர் ஆகியோர்கள் அன்று மாலையே பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தோம்.

எனது தம்பி பரமக்குடி நீதிமன்றத்திற்கு வந்த பொழுது காவல்துறையினர் பஸ் ஸ்டாண்ட்டில் வைத்து எனது தம்பியை அடித்து இழுத்துச்சென்று வேற கேஸ் போட்டதாக சொன்னார்கள். எனது தம்பியின் பிரேதத்தை நான் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். எனது தம்பி ஒரு முஸ்லீம் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டதாக அப்போது அங்கிருந்து நான் தெரிந்து கொண்டேன். எனது தம்பிக்கு ஒரு குழந்தை இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன். தம்பி இறந்தது சம்மந்தமாக போலீசார் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்தார்கள். நாங்கள் எனது தம்பியின் உடலை அரசு மருத்துவமனையிலிருந்து பெற மறுத்து போராட்டம் நடத்தினோம். ஏனென்றால், எனது தம்பியை போலீஸ் அடித்துக்கொன்றதாக கேள்விப்பட்டதால் போராட்டம் நடத்தினோம். எனது தம்பி இறப்பிற்கு நஷ்ட ஈடு வேண்டும் என்றும், தம்பி மனைவிக்கு அரசு வேலை வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தோம்.

அதன்பின்பு நீதிபதி மற்றும் உயர்அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியதன் அடிப்படையில் எனது தம்பியின் உடலை பெற்று எங்கள் குல வழக்கப்படி அடக்கம் செய்தோம். என்னை குற்றவியல் நடுவர் நீதிபதி அவர்களும் CBCID போலீசாரும் விசாரித்தார்கள். எனது தம்பியை எந்த இடத்தில் எந்த போலீசார் அடித்தார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை CBCID போலீசார் எங்கு எந்ததேதியில் விசாரித்தார்கள் என்றால் அவர்களுடைய அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். விசாரித்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என்னை குற்றவியல் நீதித்துறை நடுவர்கள் எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் வைத்து விசாரித்தார்கள், தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் எனது தம்பி மீது திருட்டு வழக்கு ஒன்று இருந்தது என்றால் சரிதான். அதேபோல் எனது தம்பி மீது மதுரையிலும் இருந்தது என்றால் சரிதான்.

எனக்கு மதுரை முனிச்சாலையில் வீடு உள்ளது. எனது தம்பி வெங்கடேசன் மதுரை அண்ணா நகரில் வசித்து வந்தார். எனது தம்பி முகமது நாஸ் என்ற திவ்யா என்ற முஸ்லீம் பெண்ணை திருமணம் செய்த விவரம் எனக்குத் தெரியாது. வழக்கு காலக்கட்டத்தில் எனது தம்பி வெங்கடேசன் அண்ணா நகரில் அவருடைய மனைவியுடன் வசித்து வந்தார் என்றால் மனைவியுடன் வசித்து வந்த விவரம் எனக்குத் தெரியாது, அண்ணா நகரில் வசித்து வந்தார்.

எனது தம்பி சங்குத் தொழில் மற்றும் நகைத் தொழிலுக்காக அடிக்கடி வெளியூர் சென்றுவருவார் என்றால் சரிதான். எனது தம்பி காணாமல் போன பின்னிட்டு என் தம்பியுடன் செல்போனில் தொடர்பு கொண்டேனா என்றால் நான் தொடர்பு கொள்ளவில்லை. எனது தகப்பனார் தொடர்பு கொண்டார். எனது தகப்பனார் எத்தனை மணிக்கு எனது தம்பியுடன் தொடர்பு கொண்டார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. எனக்கு செல்போன் உள்ளது. எனது தம்பிக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் இருந்ததா என்றால் இருந்தது. அதன் பதிவெண் எனக்குத் தெரியாது.

பரமக்குடி நீதிமன்றத்திற்கு வழக்கு விசயமாக இரு சக்கர வாகனத்தில் வந்தார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. சென்னையில் எனது தம்பி எந்த இடத்தில் எந்த கடையில் வேலை செய்து வந்தார் என்ற விவரம் எனக்குத்தெரியாது. எனது தம்பி முஸ்லீம் பெண்ணை திருமணம் செய்ததால் எனது குடும்பத்திற்கும் எனது தம்பி குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல, நான் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அன்றைய தினம் 05.30 மணிக்கு வந்தேன். எனக்கு என் தம்பி சம்மந்தமான செய்தியானது 02.00 மணிக்கு கிடைத்தது. எனது தம்பியை ஜாமின் எடுத்த விவரம் எனக்குத் தெரியாது.

எனது தம்பி பெட்டிக்கடையை அண்ணா நகரில் வைத்திருந்தார். அண்ணா நகரில் எந்த இடம் என்று எனக்குத் தெரியாது. நான் எனது தம்பியை மருத்துவமனையில் பார்த்தேன். எனது தம்பி மதுரையிலிருந்து பரமக்குடிக்கு எந்த உடை அணிந்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனது தம்பி இருசக்கர வாகனத்தில் சம்பவ தினத்தன்று காந்திசிலை அருகே வேகமாக சென்ற பொழுது அவர் கீழே விழுந்துவிட்டார் என்ற விவரமும், அவரை போலீசார் கைது செய்த விவரமும் எனக்குத் தெரியாது.

எனது தம்பி தான் வைத்திருந்த கத்தியால் முனியசாமியை மிரட்டினார் என்றும், அதனால் முனியசாமி தான் வைத்திருந்த கம்பால் எனது

தம்பியை தாக்கியதால் எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றால் அது தவறு. எனது தம்பி இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் அது தவறு. எனது தம்பி 01.10.2012 ம்தேதி மதுரையிலிருந்து பரமக்குடி நீதிமன்றத்திற்கு வந்த பொழுது பரமக்குடியில் உள்ள காக்காத்தோப்பு பகுதியில் எனது தம்பிக்கும் மற்ற இரு நபர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு என் தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

நீதிபதி மற்றும் உயர் அதிகாரிகள் எத்தனை மணிக்கு எனது தம்பி இறந்தது எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சில்வர் கடையில் வேலை செய்து வருகிறேன். நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் எனது தம்பியின் உடலை நான் பார்க்கவில்லை என்றாலும், நீதிபதி மற்றும் உயர் அதிகாரிகளிடம் நான் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளால் எனது தம்பிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி இறப்பிற்கு ஆஜர் எதிரிகளுக்கும், ஆஜராகாத எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. CBCID போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும், இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,<br>
முதன்மை அமர்வு நீதிபதி,<br>
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 11.06.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 3

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 11ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. இராமானுஜம் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இராமானுஜம் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( ஏ 2– ஞானசேகரன், ஏ 4 – கோதண்டராமன் ஆஜர்)

(ஏ 3 – கிருஷ்ணவேலு ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

(ஏ 1 –முனியசாமி இறப்பு)

<u>முதல் விசாரணை:</u>

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் அருகில் உள்ள வல்லம் ஆகும். நான் தற்சமயம் மதுரையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பாக பரமக்குடி பாண்டியன் தெருவில் வசித்து வந்தோம். எனக்கு 3

மகன்கள். அ.சா.1 செந்தில்குமார் எனது நடுபையன். அ.சா.2 பாஸ்கரன் எனது மூத்த மகன். இறந்துபோன வெங்கடேசன் எனது இளையமகன். சாட்சி இந்திரா எனது மனைவி.

நாங்கள் பரமக்குடியில் வசித்து வரும் பொழுது எனது மகன் வெங்கடேசனுக்கு ஐயப்பன் என்பவர் நெருங்கிய நண்பர் ஆவார். மேற்படி ஐயப்பன் எனது வீட்டின் அருகில் குடியிருந்து வந்தார். எனது மகன் வெங்கடேசன் மீதும், ஐயப்பன் மீதும் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் 2010 ம் வருடம் ஒரு திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் எனது மகனை 20 நாட்கள் கழித்து ஜாமினில் எடுத்தோம். ஜாமின் எடுத்த பின்னிட்டு எனது மகன் வெங்கடேசன் சென்னை சென்றுவிட்டார். அங்கு சில நாட்கள் இருந்து விட்டு திரும்ப மதுரைக்கு வந்துவிட்டார். மதுரை அண்ணாநகரில் பெட்டிக்கடை வைத்து பால்வியாபாரம் செய்து வந்தார்.

கடந்த 01.10.2012 ம் தேதியன்று எனது மகன் பரமக்குடி நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்கு வாய்தாவிற்காக மதுரையிலிருந்து பரமக்குடி வந்தார். வாய்தாவிற்கு பரமக்குடி நீதிமன்றத்திற்கு சென்றவர் திரும்ப நீதிமன்றத்திற்கு வரவில்லை. அதன்பின் இரு நாட்கள் கழித்து எனது மகன் செந்தில்குமார் எனக்கு போன் செய்து எனது மகன் வெங்கடேசன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். அதன்பிறகு நாங்கள் மதுரையிலிருந்து பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தோம்.

எனது மகனின் உடலை பார்த்தோம். எனது மகனின் உடம்பு முழுவதும் அடிபட்டுக்கிடந்தது. பரமக்குடி காந்திசிலை அருகே பைக்கில் சென்ற எனது மகனை இரு போலீசார்கள் பிடித்து அடித்து காவல் நிலையம் அழைத்து சென்றதாகவும், அங்கு வழக்கு பதிவு செய்து தாக்கியதாகவும் நான் கேள்விப்பட்டேன். எனது மகன் ஒரு முஸ்லீம் பெண்ணை திருமணம் செய்து

ஒரு குழந்தை இருப்பதாக அந்த இடத்தில் நான் தெரிந்து கொண்டேன். எனது மகன் இறந்தது சம்மந்தமாக போலீசார் கேஸ் போட்டிருந்தார்கள். நாங்கள் எனது மகனின் பிரேதத்தை வாங்க மறுத்து போராட்டம் நடத்தினோம்.

பின்னர், நாங்கள் வைத்த கோரிக்கை சம்மந்தமாக உயர் அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தியதன் அடிப்படையில், நாங்கள் எனது மகனின் பிரேதத்தை மருத்துவமனையிலிருந்து பெற்றுக்கொண்டோம். பின்னர் எங்கள் குல வழக்கப்படி எனது மகனின் பிரேதத்தை அடக்கம் செய்தோம். எனது மகனின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி வழக்கை CBCID க்கு மாற்றக்கோரி நீதிப்பேராணை தாக்கல் செய்திருந்தோம். என்னை எனது மகன் இறந்தது சம்மந்தமாக CBCID போலீசார் அவர்களும், பரமக்குடி நீதித்துறை நடுவர் அவர்களும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் சென்னைக்கு சென்றுவந்த பிறகு மதுரையில் அண்ணா நகரில் வசித்து வந்தார். இந்த சம்பவ சமயத்திற்கு முன்பாக இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் முகமது நாஸ் என்ற முஸ்லீம் மத பெண்ணை திவ்யா என பெயர் மாற்றி திருமணம் செய்து கொண்டார். சென்னையில் இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் எங்கு என்ன வேலை செய்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது.

இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் மீது ஒரு திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு அது பரமக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த விவரம் எனக்குத் தெரியும். மதுரையிலிருந்து எனது மகன் பரமக்குடிக்கு சம்பவ தினத்தன்று இருசக்கர வாகனத்தில் வந்தார். எனது மகன் காலையில் 05.00 மணிக்கு மதுரையிலிருந்து கிளம்பி பரமக்குடி வந்தார். அப்பொழுது என்னிடம் சொல்போன் இல்லை. இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் செல்போன் வைத்திருந்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக

தெரியாது. என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் எந்த தேதியில் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. என்னை நீதிபதி விசாரித்த பொழுது சம்பவ தினத்தன்று நான் செல்போனில் எனது மகனுக்கு 30 லிருந்து 40 முறை தொடர்பு கொண்டும் எனது மகன் எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. மேலும் எனது மகன் காயம்பட்டு இறந்துபோன நிலையில் அரசு மருத்துவமனையில் நான் சென்று பார்த்த விவரத்தை நீதித்துறை நடுவரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

பரமக்குடிக்கு சம்பவ தினத்தன்று நான் மதுரையிலிருந்து காலை 05.00 மணிக்கு வந்தேன். இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் சங்கு வியாபாரம் மற்றும் நகை விற்கும் தொழில் செய்து வந்தாரா என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. எனது குடும்பத்திற்கும் இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் மனைவி குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை உண்டா என்றால் கிடையாது. 03.10.2012 ம் தேதி அதிகாலை இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்தார் என்றும், அவ்வாறு அவர் வந்து கீழே விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் சார்பு ஆய்வாளர் முனியசாமியை இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் கத்தியை காட்டி மிரட்டியதாகவும், அதனால் முனியசாமி தான் வைத்திருந்த கம்பால் இறந்துபோன எனது மகன் வெங்கடேசனை அடித்து கத்தியை தட்டிவிட்டதால் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

நான் சொன்னது போன்று, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் மதுரையிலிருந்து பரமக்குடிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் உடலை அடக்கம் செய்யும்பொழுதுதான் நான் வந்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், ஆஜர் இல்லாத

எதிரிக்கும் எனது மகன் இறப்பிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. CBCID போலீசார் அறிவுறுத்தலின்படியும், இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 11.06.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 4

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 11ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி. இந்திரா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்திரா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( ஏ 2– ஞானசேகரன், ஏ 4 – கோதண்டராமன் ஆஜர்)

(ஏ 3 – கிருஷ்ணவேலு ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

(ஏ 1 –முனியசாமி இறப்பு)

<u>முதல் விசாரணை:</u>

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் அருகில் உள்ள வல்லம் ஆகும். நான் தற்சமயம் மதுரையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பாக பரமக்குடி பாண்டியன் தெருவில் வசித்து வந்தோம். எனக்கு 3 மகன்கள். அ.சா.1 செந்தில்குமார் எனது நடுபையன். அ.சா.2 பாஸ்கரன் எனது

மூத்த மகன். இறந்துபோன வெங்கடேசன் எனது இளையமகன். சாட்சி இராமானுஜம் எனது கணவர். நாங்கள் பரமக்குடியில் வசித்து வந்த பொழுது எங்கள் வீட்டின் அருகில் ஐயப்பன் என்பவர் குடியிருந்து வந்தார். அவர் எனது மகன் வெங்கடேசனுக்கு நெருங்கிய நண்பர் ஆவார்.

இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் மற்றும் ஐயப்பன் மீது 2010ம் வருடம் பரமக்குடி காவல்நிலையத்தில் ஒரு திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் இருந்தார். நாங்கள் அவரை 20 நாட்கள் கழித்து ஜாமினில் எடுத்தோம். ஜாமினில் எடுத்த பின்னிட்டு எனது மகன் சென்னையில் சில நாட்கள் சேலைசெய்து வந்தார். அதன்பின்பு சென்னையிலிருந்து மதுரை வந்து மதுரை அண்ணாநகரில் பெட்டிக்கடை மற்றும் பால் வியாபாரம் செய்து வந்தார்.

கடந்த 01.10.2012ம் தேதியன்று எனது மகன் மதுரையிலிருந்து பரமக்குடி நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கின் வாய்தாவிற்க வந்தார். அதன்பிறகு வீட்டிற்கு திரும்ப வரவில்லை. கடந்த 03.10.2012ம் தேதியன்று எனது மகன் வெங்கடேசனை பரமக்குடி போலீசார் விசாரணைக்கு அழைத்துச்சென்று அடித்து இறந்துவிட்டதாக எனது மகனான அ.சா.1 செந்தில்குமார் என்னிடம் தகவல் சொன்னார். நாங்கள் அனைவரும் உடனே பரமக்குடி அரசுமருத்துவமனை சென்று பார்த்தோம். எனது மகனுக்கு உடம்பு முழுவதும் காயங்கள் இருந்தது. ஆடைகள் எதுவுமின்றி இருந்தார். எனது மகன் பரமக்குடி காந்திசிலை அருகே வரும் பொழுது போலீசார் அவரை அடித்து காவல்நிலையம் கொண்டுசென்றதாகவும், அதனால் ஏற்பட்ட காயத்தில் எனது மகன் இறந்ததாகவும் நான் கேள்விப்பட்டேன்.

எனது மகனுக்கு ஒரு மனைவி மற்றும் ஒரு குழந்தை இருப்பதாக ஆஸ்பத்திரியில் வைத்து நான் தெரிந்து கொண்டேன். எனது மகன் இறந்தது சம்மந்தமாக பரமக்குடி போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தார்கள். எனது மகனின் இறப்பிற்கு காரணமாக போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வழக்கினை வேறு போலீசார் விசாரிக்க

வேண்டும் என்றும், எனது மருமகளுக்கு அரசு வேலை வேண்டும் என்றும் எனது மகனின் இறப்பிற்கு நஷ்டஈடுவேண்டும் என்றும், எனது மகனின் உடலை வாங்க மறுத்து பேராட்டம் செய்தோம்.

பின்னர் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எனது மகனின் உடலை வாங்கி அடக்கம் செய்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை பரமக்குடி நீதித்துறை நடுவரும், CBCID போலிசாரும் விசாரணை செய்தார்கள்.

__எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை__

CBCID போலிசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் இறந்ததேதியில் என்னை விசாரித்தார்கள். இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் இறந்த சமயத்தில் என் வசம் செல்போன் இல்லை. எனது மகன் முகமது நாஸ் என்ற திவ்யா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அதனால் எனது மகன் குடும்பத்திற்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. எனது மகன் இறந்த தேதியன்று மாலை 06.00 மணிக்கு மதுரையிலிருந்து பரமக்குடிக்கு வந்தோம்.

எனது மகன் வீட்டிற்கு வராததால் அன்று 04.00 மணி வரை போன் மூலமாக தொடர்பு கொண்டேன் என்று என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு. இறந்துபோன எனது மகன் வெங்கடேசன் சென்னையில் என்ன வேலை செய்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனது மகன் சங்கு வியாபாரம் மற்றும் நகை வியாபாரம் செய்து வந்தார் என்றால் இல்லை, வெள்ளி வியாபாரம் செய்து வந்தார். அன்று மருத்துவமனைக்கு எனது மகனை பார்க்க இரவு 09.00 மணிக்கு சென்றேன்.

நான் மருத்துவமனைக்கு சென்ற பொழுது இறந்துபோன எனது

மகன் வெங்கடேசனின் மனைவி மருத்துவமனையில் இருந்தார். எனது மகனுக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் இல்லை. எனது மகன் மதுரையிலிருந்து பரமக்குடி நீதிமன்றத்திற்கு எதில் வந்தார் என்றால் பேருந்தில் வந்தார். எனது மகன் செல்போன் வைத்திருந்தார். கடந்த 03.10.2012 ம் தேதி அதிகாலை 03.30 மணியளவில் போலிசாரை பார்த்து பரமக்குடி காந்திசிலை அருகே தப்பித்து இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்ற பொழுது, காந்திசிலை அருகே கீழே விழுந்ததில் தலையிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது என்றாலும், இறந்துபோனவர் கையில் வைத்திருந்த கத்தியால் சார்பு ஆய்வாளர் முனியசாமியை மிரட்டினார் என்றும், அதனால் எதிரி முனியசாமி தான் வைத்திருந்த கம்பால் எனது மகனை தாக்கி அவர் வைத்திருந்த கத்தியை கீழே விழவைத்தார் என்றும், அதனால் வெங்கடேசனுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

அதே போன்று 01.10.2012 ம் தேதி இரவு பரமக்குடி அருகே உள்ள காக்காத்தோப்பு அருகே இறந்துபோன வெங்கடேசனுக்கும், அங்கிருநத இரு நபர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், அந்த தகராறில் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மகனின் இறப்பிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும், ஆஜர் இல்லாத எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. CBCID போலீசார் அறிவுறுத்தலின் பேரிலும், நஷ்டஈடு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் போலீசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை அமர்வு நீதிபதி,
இராமநாதபுரம் .